ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1687/45 - 2011 ජනවාරි 07 වැනි සිකුරාදා - 2011.01.07

1687/45 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 32.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10(1)(அ) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் அனைவரும் பத்திரிகைகள், திரைப்படங்கள், தொலைக்காட்சி, வீடியோ, ஓடியோ, வானொலி, இன்ரனற் அல்லது வேறு ஏதேனும் அச்சு மின்சார அல்லது இலத்திரனியல் ஊடகங்களில் பண்டம் அல்லது பண்டங்களின் விற்பனை தொடர்பிலான ஒவ்வொரு விளம்பரத்திலும் அத்தகைய குறிப்பிட்ட பண்டம் அல்லது பண்டங்களின் சில்லறை விற்பனை விலைகள் விசேடமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டுமென, உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் அனைவருக்கும் இத்தால் பணிப்புரை விடுக்கின்றது.

இது சம்பந்தமாக 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 1462/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 07 ஆம் இலக்க பணிப்புரை, இப்பணிப்புரையின் மூலம் இரத்துச் செய்யப்படுகின்றது.

இப்பணிப்புரை 2011, பெப்புருவரி 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்புரையின்படி,

ரூமி மர்சூக்,
தலைவர்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,
கொழும்பு,
2011, சனவரி 06.

01-500